**02**

# முயற்சியாண்மைக்கல்வி

## அலகு ரீதியான மீட்டல் செயலட்டைகள்

## முயற்சியாண்மைக்கும் வணிகத்திற்கும் இடையிலான தொடர்பு

## தரம் 10

COMMERCE & BUSINESS STUDIES BRANCH

சுருக்கமான விடை தருக.

1. வணிகம் என்பதால் கருதப்படுவது யாது?
2. வணிகர் என்பவர் யார்?
3. மனிதன் உயிர் வாழ்வதற்கு தேவைகள் மற்றும் விருப்பங்கள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். இங்கு தேவை மற்றும் விருப்பம் என்பதால் குறிப்பிடப்படுவது யாது?
4. தேவைகள் 2 குறிப்பிட்டு அதற்கான விருப்பங்கள் 2 குறிப்பிடுக.
5. மனிதனுடைய அன்றாட வாழ்க்கையை கொண்டு நடாத்துவதற்கு பொருட்கள் மற்றும் சேவைகள் பயன்படுத்தப்படுகின்றன. அவ்வாறான சந்தர்ப்பங்கள் 3 குறிப்பிட்டு அதற்காக பயன்படுத்தக்கூடிய பொருட்கள் மற்றும் சேவைகள் 2 வீதம் எழுதுக.
6. தேவைகள் மற்றும் விருப்பங்கள் பூர்த்தி செய்யப்படுவது பொருட்கள் மற்றும் சேவைகளை நுகர்வதன் மூலமாகும்.

    I. தேவை மற்றும் விருப்பம் என்பவற்றுக்கிடையிலான வேறுபாடுகள் 3 தருக.

    II. பொருட்கள் மற்றும் சேவைகள் என்பவற்றால் கருதப்படுவது யாது?

    III. பொருட்கள் மற்றும் சேவைகள் ஆகியவற்றின் பண்புகள் 3 தருக.

    IV. கீழே தரப்பட்டுள்ள தேவையை நிறைவு செய்யக்கூடிய வழிமுறைகள் 2 தருக.

A சுகாதாரம் ..............................

B தொடர்பாடல் ..............................

7. வணிகம் தொடர்பான உங்களுடைய புரிதலை அதிகரித்துக் கொள்வதற்காக வணிகத்தின்

பண்புகளை நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும். அவ்வாறு அறிந்திருக்க வேண்டிய வணிகத்தின் பண்புகள் 4 தருக.

8. வணிகர்கள் முயற்சியாளர்களாகவும், முயற்சியாளர்கள் வணிகர்களாகவும் அழைக்கப்படும் சந்தர்ப்பங்கள் உள்ளன. அவ்வாறு இரண்டு தரப்பினர்களுக்கிடையில் உள்ள ஒற்றுமைகள் 4 தருக.

9.




மேலே வெண் உருவில் காட்டப்பட்டுள்ள முயற்சியாளர்கள் வணிகர்களுக்கிடையிலான தொடர்பினை உமது வசன நடையில் எழுதுக.

10. “சகல வணிகர்களும் முயற்சியாவதில்லை. அதே போன்று சகல முயற்சியாளர்களும் வணிகர்களாவதில்லை.” இக்கூற்றுடன் நீங்கள் உடன்படுகின்றீர்களா? காரணம் கூறுக.

11. வணிகர்கள் மற்றும் முயற்சியாளர்களுக்கிடையிலான 4 வேறுபாடுகள் தருக.

12. “வணிகர்களை விட வெற்றி பெற அதிக வாய்ப்பு காணப்படுவது முயற்சியாளர்களிடம்” இக்கூற்று தொடர்பான உமது கருத்தைக் குறிப்பிடுக.

13. உங்கள் வீடு அல்லது பிரதேசத்தில் காணப்படும் வளத்தை பயன்படுத்தி நீங்கள் உற்பத்தி ஒன்றை உருவாக்க விரும்பினால் அந்த செயலை நிறைவேற்ற நீங்கள் எடுக்க கூடிய செயற்பாடுகளையும், திட்டங்களையும் சுருக்கமாக விளக்குக. நீங்கள் இங்கு கற்றுக்கொண்ட முயற்சியான்மையின் பண்புகள், வணிகத்தின் பண்புகள், மற்றும் முயற்சியான்மை தொடர்பான உமது அறிவு ஆகியவற்றை பயன்படுத்துக.

14. “முயற்சியாளர்கள் என்போர் இலாப நோக்கத்துடன் வணிகச் செயற்பாடுகளில் ஈடுபடும் வணிகர்கள் மட்டும் அல்லர்”. முயற்சியாளர்களின் வகைகளைக் குறிப்பிடுக.

COMMERCE & BUSINESS STUDIES BRANCH

15. ஆண்களுக்கான ஆடைகளை வீடு வீடாக சென்று விற்பனை செய்யும் திரு. சாரங்க தெனிபிட்டிய Handsome எனும் பெயரில் ஆடை வியாபாரத்தை ஆரம்பித்தார். அந்நிறுவனத்தின் முகாமையாளராக செயற்படும் அவர் அவ்வணிகத்தின் அனைத்து நடவடிக்கைகளையும் கவனித்து தேவையான வழிகாட்டல்களை வழங்குவதுடன் ஊழியர்களுடன் மிக நட்பாகவும் இருக்கின்றார். இன்றைய தினத்தில் மிக பிரசித்தி பெற்ற Handsome ஆடை வணிகத்தின் வளர்ச்சியின் ஏணியானது திரு. சாரங்க தெனிபிட்டிய அவர்களின் செயற்பாடாகும் என அனைவரும் கருதுகின்றனர்.

I. மேற்குறிப்பிட்ட நிகழ்விலிருந்து திரு. சாரங்க தெனிபிட்டிய எவ்வாறானதொரு முயற்சியாளர் என நீங்கள் கருதுகின்றீர்கள்?

II. உங்களுக்குத் தெரிந்த பிற முயற்சியாளர்களின் வகைகளைக் குறிப்பிடுக.

III. முயற்சியாளர்கள் மற்றும் வணிகர்களுக்கு இடையில் 3 ஒற்றுமைகள் குறிப்பிடுக.

IV. முயற்சியாளர்கள் மற்றும் வணிகர்களுக்கு இடையில் 3 வேற்றுமைகள் குறிப்பிடுக.

V. நீங்கள் சாரங்க தெனிபிட்டியவாக இருந்தால் விற்பனையை அதிகரிக்க மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள் 3 தருக.

16. வணிகத்தின் பண்பானது பொருளாதார நடவடிக்கையாக அமைவது ஆகும். இங்கு பொருளாதார நடவடிக்கையாக அமைவது என்பதால் கருதுவது என்ன?

(02) கீழே தரப்பட்டுள்ள கூற்றுக்கள் சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (✗) எனவும் அடையாளமிடுக.

1. மனித தேவைகள் பூர்த்தி செய்யப்படுவது பொருட்கள் மற்றும் சேவைகளை நுகர்வதன் மூலமாகும். (    )
2. தேவைகளும் விருப்பங்களும் எல்லையற்றதாகும். (    )
3. முற்சியாளர் இலாபத்தை அதிகரிப்பதற்காக மட்டுமே செயற்படுகின்றார். (    )
4. ஒரு நிறுவனத்தின் ஊழியர்களும் முயற்சியாளர்களாக இருக்கலாம். (    )
5. கொடுக்கல் வாங்கல் தொடர்ச்சியாக இடம்பெறுவது வணிகத்தின் பண்பாகும். (    )

COMMERCE & BUSINESS STUDIES BRANCH

6. வணிகர்கள் இடர் அபாயங்களை ஏற்பதில்லை. முயற்சியாளர்கள் இடர் அபாயங்களை விருப்பத்துடன் ஏற்றுக் கொள்கின்றனர். ( )
7. இலாப நோக்கற்ற முயற்சியாளர்களும் உள்ளனர். ( )
8. தேவைகளை பூர்த்தி செய்ய பொருட்களை பயன்படுத்துவது அவசியமாகும். மற்றும் சேவைகளை நுகர்வதற்கு பொருட்கள் மிகவும் அவசியம். ( )
9. விருப்பங்கள் தோன்றுவது தேவைக்கு முன்னாகும். ( )
10. சில முயற்சியாளர்கள் வணிகர்களாவர். ( )
11. நிதி நடவடிக்கைகளை கருத்தில் கொள்வது வணிகங்களின் பண்பு அல்ல. ( )
12. முயற்சியாளர்கள் பிரச்சினைகளை ஆக்கபூர்வமாக நீக்குகின்றனர். ( )
13. உள்ளக முயற்சியாளர்கள் சமூக பிரச்சினைகளுக்கு ஆக்கபூர்வமான தீர்வுகளை காண்கின்றனர். ( )
14. C.W.W. கன்னங்கரா அவர்கள் வர்த்தக முயற்சியாளராக இலவச கல்விக் கொள்கைகளை அறிமுகப்படுத்தினார். ( )
15. மனிதனின் தேவை மற்றும் விருப்பங்களை பூர்த்தி செய்யும் எவையும் பொருட்கள் மற்றும் சேவைகள் என அழைக்கலாம். ( )

**(03) இடைவெளிகளை நிரப்புக.**

1. மனித தேவைகளை பூர்த்தி செய்யும் பல்வேறு வழிமுறைகள் …………………. எனப்படும்.
2. விருப்பங்கள் பூர்த்தி செய்யப்படுவதன் மூலம் …………………. பூர்த்தி செய்யப்படுகிறது.
3. வணிக நடவடிக்கைகளில் ஈடுபடும் …………………. எனப்படுகிறார்.
4. …………………. மற்றும் …………………. மனித தேவைகளையும் விருப்பங்களையும் பூர்த்தி செய்கின்றது.
5. பொருட்களுக்கு பௌதீக தன்மை காணப்படுகின்றது. அவை …………………. எனப்படும்
6. வழங்குனர்களிடம் இருந்து பிரிக்க முடியாதது …………………. எனப்படும்.
7. உணவு என்பது …………………. ஆவதுடன் மற்றும் பிட்டு என்பது …………………. வகைக்குள்

COMMERCE & BUSINESS STUDIES BRANCH

அடங்கும்.

8. ஒவ்வொரு வணிகரும் …………………. அல்ல.

9. முயற்சியாளர்கள் என்போர் …………………. எனப்படுவர்.

10. சமூக பிரச்சினைகளுக்கு தீர்வு …………………. காணும் ஒரு கண்டுபிடிப்பாளர் …………………. முயற்சியாளர் ஆவார்.

COMMERCE & BUSINESS STUDIES BRANCH